[2005 மார்ச் 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 153, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

153—

தொழிற்பேட்டை

***41739—திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகரில் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

முற்பகல் 10-55

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டையும், அதைச் சுற்றியுள்ள பகுதியும் மிக, மிகப் பின்தங்கிய பகுதி. அந்தப் பகுதியிலே எந்தவிதமான தொழில் வளமும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, எங்களது மாவட்டத்திலே, மானாமதுரையிலே இருக்கக்கூடிய தொழிற்பேட்டையும் இன்றைக்கு மூடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, தேவகோட்டை பகுதியிலே ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ சிவகங்கை கிளையின்கீழ் ஐந்து தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றான காரைக்குடி தொழிற்பேட்டை --காரைக்குடியிலிருந்து திருவாடனை தொகுதிக்குட்பட்ட தேவகோட்டைக்குச் செல்லும் வழியில்--சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் தேவகோட்டை ரஸ்தா என்னும் இடத்தில் ஏற்கெனவே ஒரு தொழிற்பேட்டை அமைந்துள்ளதால், புதியதாக தேவகோட்டை நகரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 மார்ச் 14]

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டை ரஸ்தா என்பது திருவாடனை தொகுதி என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அது காரைக்குடி தொகுதியைச் சார்ந்த இடம். அது காரைக்குடி பகுதியிலே இருந்தாலும், தேவகோட்டை பகுதி மிக, மிகப் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதியிலே புதிதாக ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தரவேண்டும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம், பக்கமாக இருக்கக்கூடிய, இணைந்திருக்கின்ற, ஒன்றியுள்ள பகுதிகள் அவை. ஏற்கெனவே தேவகோட்டை ரஸ்தாவில் அமைந்துள்ள தொழிற்பேட்டையிலே இன்னும் விற்கப்படாத தொழிற்கூடங்கள் ஐந்தும், காலியிடம் 100 ஏக்கர் நிலமும் இருக்கின்றன. இந்த நிலையில் தேவகோட்டை நகருக்கு மிக அருகிலேயே இந்தத் தொழிற்பேட்டைகள் எல்லாம் அமைந்துள்ள காரணத்தால், தேவகோட்டை நகரிலே மற்றுமொரு தொழிற்பேட்டை அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். ராஜா.

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவகோட்டை ரஸ்தாவில் அமைந்திருக்கின்ற தொழிற்பேட்டையிலே இதுவரை எந்தவொரு ஆரோக்கியமான தொழிற்கூடமும் அமையவில்லை. பல தொழிற்கூடங்கள் காலியாக இருக்கின்றன. தொழிற்கூடங்கள் ஏற்போரே இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதை முன்னேற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: தலைவர் அவர்களே, ஒரு தொழிற்பேட்டை அமைவதற்குத் தொழில் முனைவோர்கள் முதலில் முன்வரவேண்டும். ஏற்கெனவே அரசு, தொழில் முனைவோர்களை எல்லாம் அழைத்து, அந்தந்த மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடத்தி, அந்தந்தப் பகுதியிலே என்னென்ன தொழில் செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்பது குறித்து அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் விரும்புவாரேயானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய காலியிடங்களில் தொழில் முனைவோர்கள் முன்வந்து தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாரமலை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் குறிப்பிட்டபோது, மானாமதுரையில் இருக்கிற அந்தத் தொழிற்பேட்டை மூடிவிடக்கூடிய நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அது சிப்காட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முத்தனேந்தலிலே சிட்கோ ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பித்து, அதில் பல கட்டடங்கள் கட்டி, இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதைத் திறந்து வைப்பதற்கு, ஓட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

154—

தொழிற்பேட்டை

***42143—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தொழில் வளாகம் அமைக்க இருபது ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் அமைக்க முன்வருவார்களேயானால் தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொழிற்பேட்டை அமைக்க சிட்கோவால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.